# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **134/ந/2019**
நாள் : **09/09/2019**

**திருமதி கனகவேல்,**
**அருப்புக்கோட்டை.** – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
அருப்புக்கோட்டை நகராட்சி. – **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, பந்தல்குடி சாலை, 166 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி கனகவேல் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2019 அன்று பெறப்பட்டு 134/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, பந்தல்குடி சாலை, 166 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி கனகவேல் என்பவர், இடைநிலை ஆசிரியையாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற தனக்கு வழங்கப்படவேண்டிய 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை ரூ.5,417/– மற்றும் அத்தொகைக்கான வட்டி ரூ.74,996/– வழங்கக்கோரும் மனுவினை ஏப்ரல் 2019–இல் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பித்துள்ளார். மேற்குறிப்பிட்ட மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் தற்பொழுது இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் அரசு பணியாளர்களாக மாற்றம் செய்யப்பட்டு 01.04.1992 முதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பதிவேடுகளும் உதவி தொடக்கக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு 31.03.1994 அன்று இறுதியிருப்பு சான்றளிக்கப்பட்டு 01.04.1994 முதல் கல்வித்துறை மூலமாக மாநிலக் கணக்காயருக்கு அனுப்பப்பட்டுள்ளதென அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் தனது 09.08.2019 நாளிட்ட அறிவிப்பு எண். 3099/2019/சி1–இல் தெரிவித்துள்ளார். எனவே, நகராட்சி ஆசிரியர்களுக்கு 01.04.1994–க்குப் பிந்தைய கோரிக்கைகள் அனைத்தும் கல்வித்துறை மூலமே தீர்வு செய்யப்படவேண்டும் எனத் தெரிவித்து கல்வித்துறைக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். எனவே, 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அத்தொகைக்குண்டான வட்டியை வழங்குவது சம்பந்தமான கோரிக்கைக் குறித்து கல்வித் துறைக்கு முறையீடு செய்து கொள்ளுமாறு மனுதாரருக்கு தெரிவித்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 9–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

16.5.15

16/9/19

பெறுநர்

1. திருமதி [illegible],
166, பந்தல்குடி ரோடு,
அருப்புக்கோட்டை – 626 101.
விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
அருப்பு கோட்டை நகராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
திருநெல்வேலி.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை – 28.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி